திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்.திரு.மீ.உதயகுமார். எம்.எஸ்.சி.எம்.எட்.,

ந.மு. எண் 6681/அ1/2023 நாள். 14 .08.2024.

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி - அமைச்சுப்பணி - திருப்பூர் மாவட்டம், நிழலி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, தலைமை ஆசிரியர் திருமதி. ஜெ.ராமாத்தாள் என்பார் பணிக்காலத்தில் 14.11.2015 இல் இறப்பு-வாரிசுதாரரான மகள் செல்வி. இ.சங்கீதா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் --- - சார்பு.

பார்வை:

1. அரசு ஆணை எண் 151 பள்ளிக் கல்வி(வரவு-செலவு)த் துறை நாள். 09.09.2022.
2. திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்விஅலுவலரின் செயல்முறைகள் 7164/அ1/2022, நாள் 11.10.2022.
3. அரசு கடித எண் (efile) எண் 4419/தொ.க.1(1)/2024-1 நாள் 17.05.2024.
4. திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் 6681/அ1/2023 நாள். 21.06.2023.
5. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 050586/ஜே/இ2/2023, நாள். 22.06.2024.

..........................

பார்வை 2இல் காண் செயல்முறைகளின்படி திருப்பூர் மாவட்டம் நிழலி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் தலைமையாசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 14.11.2015இல் காலமான திருமதி.ஜெ.ராமாத்தாள் என்பாரின் வாரிசுதாரரான மகள் செல்வி.இ.சங்கீதா என்பாருக்கு இளநிலை உதவியாளராக பணிவாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் 14.10.2022 முற்பகல் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிடும் பொருட்டு பார்வை 3இல் காண் கருத்துருக்கள் அனுப்பப்பட்டது.

பார்வை 5இல் காண் செயல்முறைகளின்படி பணிவரன்முறை கருத்துருக்கள் பார்வை 3ல் காண் அரசு ஆணையில் தெரிவித்தவாறு செயல்பட திருப்பி அனுப்பப்பட்டது. பார்வை 3ல் காண் அரசு கடிதத்தில் இனம் 16ன்படி விதித்தளர்வு தேவைப்படாத இனங்களில் சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை பணிவரன்முறை செய்திடுமாறு அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட பணியாளருக்கு அவருக்கு எதிரே குறிப்பிட்ட நாளில் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

த.பி.ப....

| வ.எண் | பெயர்/பதவி/அலுவலகம் | பணி நியமன நாள் மற்றும் நியமன முறை | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 01. | செல்வி.இ.சங்கீதா<br>இளநிலை உதவியாளர்.<br>வட்டாரக் கல்வி அலுவலகம்.<br>பொங்கலூர்.<br>திருப்பூர் மாவட்டம். | 14.10.2022<br>முற்பகல்<br>(கருணை அடிப்படை) | 14.10.2022<br>முற்பகல் |

நிபந்தனைகள்

1. பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தொடர் முடித்த பின்னரே தகுதிகாண் பருவ ஆணை விளம்பப்படும்
2. துறைத் தேர்வுகள் 2 ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
3. மேற்காண் பணியாளர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை முடித்து அதற்குரிய அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும்.
4. தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் 5 ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறாவிட்டால் தனியர்மீது தமிழ் நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்)சட்டம் 2016ன் பிரிவு 31 மற்றும் 33ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் .
5. இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் தகுதிகாண் பருவ ஆணை விளம்பப்பட்ட பின்னரே வழங்கப்படும்.

மேற்கண்ட பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணை நகல் மற்றும் பணிப்பதிவேடு அனுப்பிவைக்கப்படுகிறது.சம்மந்தப்பட்ட பணியாளரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும், அசல் ஆணையினை உரியவருக்கு வழங்கி ஒப்புதல் பெற்று கோப்பில் வைக்கவும், பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு:

1.பணிப்பதிவேடு 1(தொகுதி)

2.இடைநிலைகல்வி சான்று (S.No.SEC-6731940 )

14.8.24

முதன்மைக் கல்வி அலுவலர்

திருப்பூர்

பெறுநர்:-

வட்டாரக் கல்வி அலுவலர்

சார்ந்த பணியாளருக்கு (~~தலைமையாசிரியர்~~ மூலமாக)

நகல்:-

~~தலைமையாசிரியர்~~.

வட்டாரக் கல்வி அலுவலர் பொங்கலூர்.

திருப்பூர்மாவட்டம்.